ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2139/55 - 2019 සැප්තැම්බර් මස 04 වැනි බදාදා - 2019.09.04

*2139/55 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், கட்டுபொத- பமுனாகொட்டுவ, பண்டுவஸ்நுவர நீர் வழங்கல் திட்டத்தின், கொபெய்கனே கன மீற்றர் 450 நீர்த்தாங்கிக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான காணித் துண்டு ஒன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2019, ஓகத்து 29.*
*5/2/3/1492.*

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவில், இல. 1301, கொபெய்கனே கிராம அலுவலர் பிரிவில், கொபெய்கனே கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ. எம். எல். கோலித்த பண்டார அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2018/814 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித் துண்டிலக்கம் 02 இன் பகுதி (காணித் துண்டிலக்கம் A) இனால் குறிப்பிடப்படும் "கொபெய்கனே எஸ்டேட் குரூப்" என அழைக்கப்படும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த 36 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டு.

காணியின் இலக்கம் : காணித் துண்டு இலக்கம் 2 இன் பகுதி (காணித் துண்டிலக்கம் A)
காணியின் பெயர் : கொபெய்கனே எஸ்டேட் குரூப்
விஸ்தீரணம் : 36 பேர்ச்சஸ்

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி வயல் ;
மேற்கு : இந்த வரைபட காணித் துண்டு இலக்கம் 01

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

திரு. சீ. எச். எச்.கே. திமுது பிரபாத் குமார,
திமுது ஹொலிடே ரிசோட்,
பிரதேச சபை அருகில்,
கொபேய்கனே.

9-629

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், அஸ்கிரிய பூஸ்டர் (அழுத்தத்தை அதிகரிக்கும்) நீர் பம்பிக்கும் நிலையத்தின் உட்பிரவேச பாதைக்கான மாற்றுக் காணித் துண்டின் பயன்பாட்டு உரிமையை கையகப்படுத்தத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் பயன்பாட்டு உரிமையை பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 29.
5/2/1/1499.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், கண்டிப் பட்டினம் (கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரலே) பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 235, அஸ்கிரிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், அஸ்கிரிய கிராமத்திலமைந்த, நியந்தகலஹேன எனும் பெயருடைய காணியின் முழு அளவில் 3.5 பேர்ச்சர்சஸ் விஸ்தீரணத்திலான, கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு ஒன்று.*

***காணித்துண்டின் இலக்கம் : 1***
*காணியின் பெயர் : நியந்தகலஹேன*
*காணியின் விஸ்தீரணம் : 3.5 பேர்ச்சஸ்*

***காணியின் எல்லைகள் :***

*வடக்கு : குழாய் வழிகளை பொருத்துவதற்காக கையகப்படுத்த இருக்கும் உத்தேசிக்கப்பட்ட இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;*
*கிழக்கு : தம்ம சித்தி(டி) மாவத்தை ;*
*தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;*
*மேற்கு : பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக கையகப்படுத்த இருக்கும் உத்தேசிக்கப்பட்ட இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயர்களும் முகவரிகளும் :*

1. *வணக்கத்திற்குரிய தேரர்,*
   *விஹாராதிபதி,*
   *ஸ்ரீ விஜயசுந்தராராமய,*
   *அஸ்கிரிய,*
   *கண்டி.*

2. *கௌரவ பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்,*
   *பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்,*
   *கொழும்பு 07.*

3. *திருமதி கே. டீ. ஐராங்கனி பத்திரன,*
   *இல. 25, ஸ்ரீ தம்ம சித்தி(டி) மாவத்தை,*
   *அஸ்கிரிய,*
   *கண்டி.*

4. *திருமதி கே. டீ. நித்ரா அபேசேகர,*
   *இல. 25, ஸ்ரீ தம்ம சித்தி (டி) மாவத்தை,*
   *அஸ்கிரிய,*
   *கண்டி.*

5. *திருமதி கே. டீ. சுமித்ரா அபேசேகர,*
   *இல. 25, ஸ்ரீ தம்ம சித்தி (டி) மாவத்தை,*
   *அஸ்கிரிய,*
   *கண்டி.*

6. *திருமதி நந்தா அபேசேகர,*
   *இல. 25, ஸ்ரீ தம்ம சித்தி(டி) மாவத்தை,*
   *அஸ்கிரிய,*
   *கண்டி.*

*9-630*

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், விலான உடகம நீர் விநியோகத் தாங்கியை நிர்மாணிப்பதற்கு புதிய மாற்றுக் காணித்துண்டு ஒன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு ஒன்றின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஓகத்து 29.*
*5/ 2/ 1/ 1491.*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 589, விலான உடகம கிராம அலுவலர் பிரிவில், விலான உடகம கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எம். பி. ஐ. கே. பதிரன அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1837 என்ற வரைபடத்தில் குறிப்பிடப்படும் ஹபுகொல்ல பெருந்தோட்டம் எனும் பெயருடைய காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 01றூட் 03.21 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டு ஒன்று.*

*காணியின் பெயர் : ஹபுகொல்ல பெருந்தோட்டம்*
*காணியின் விஸ்தீரணம் : 01றூட் 03.21 பேர்ச்சஸ்*

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி (ஹபுகொல்ல பெருந்தோட்டம்) ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி (ஹபுகொல்ல பெருந்தோட்டம்) ;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி வயல் (ஹபுகொல்ல பெருந்தோட்டம்) ;
மேற்கு : அலவத்துகொட இலிருந்து அங்கும்புர வரையிலான பாதை (வீதி அபிவிருத்தி அதிகாரசபை).

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

வரையறுக்கப்பட்ட இன்டர் எக்ரோ லங்கா (ஜே.வீ. தனியார்) நிறுவனம்,
ஹபுகொல்ல பெருந்தோட்டம்,
விலானகம.

*9- 631*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.